இனிப்பு, சொக்கலட்,
பிஸ்கட்
மற்றும்
பழவற்றுக்கள்
விற்பனையாளர்
கணேஷா
வர்த்தக நிலையம்,
65, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு
Registered as a Newspaper
உதயன்
விலை
ரூபா
5-00

கேக் தயாரிப்பு பொருள்கள்
மற்றும்
குளிர்பானத் தயாரிப்புகளைப்
பெற்றிட
கணேஷா
வர்த்தக நிலையம்,
65, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 28 செவ்வாய்க்கிழமை (12 07 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 226

கிளாலி சேவை இன்று நடக்கும்

யாழ்ப்பாணம், ஜூலை 12

கிளாலி - பூநகரிப் படகுச் சேவை இன்று செவ்வாய்க்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

வடமராட்சி கிழக்கில் நேற்று குண்டு வீச்சுத் தாக்குதல்

தென்மராட்சி, ஜூலை 12

வடமராட்சி கிழக்கு கரையோரப் பகுதியில் நேற்று முன்தினம் சனி காலை 6-15 மணியளவில் பொம்மர்கள் தாக்குதல் நடத்தின.

இரு பொம்மர்கள் பல தடவைகள் அப்பகுதியை வட்டமிட்டு மாறிமாறிக் குண்டுகளை வீசின.

நாகர்கோவில் பொற்பதிக் கடற்கரைப் பகுதியில் வீழ்ந்து வெடித்த குண்டுகளினால் அப்பகுதியில் கட்டப்பட்டிருந்த நான்கு படகுகள் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

சுற்றுலா சென்ற மாணவரை கதி கலங்க வைத்த புக்காரா

சாவகச்சேரி, ஜூலை 12

மணற்காடு கடற்கரைப் பகுதியில் கூடியிருந்தவர்களை நேற்று முன்தினம் நண்பகல் வேளை 'புக்காரா' விமானம் ஒன்று பெரும் பரபரப்புக்குள்ளாக்கி கதிகலங்க வைத்தது.

வடமராட்சிப் பகுதிக்கு சுற்றுலாச் சென்ற பாடசாலை மாணவர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் மணற்காடு கடற்கரையில் உல்லாசமாகக் கூடியிருந்தனர்.

அச்சமயம் திடீரென வானில் வந்த 'புக்காரா' விமானம் ஒன்று பேரிரைச்சலுடன் அப்பகுதியைச் சுற்றி வட்டமிட்டது. தாழப் பறந்தும் சரிந்தும் தாக்குதல் நடத்துவது போல் அது வானில் சாகசம் புரிந்தது. இதனால் அங்கு கூடியிருந்தோர் பெரும் பதற்றமுற்று பாதுகாப்புத் தேடி அங்கும் இங்கும் சிதறி ஓடினர்.

வெட்டவெளிப் பிரதேசமானதால் பாதுகாப்புத் தேட இடமின்றிப் பலரும் அல்லோல கல்லோலப்பட்டனர்.

சிறிது நேரம் வட்டமிட்ட பின் அந்த விமானம் அங்கிருந்து சென்றது. (உ-ஐ-31)

வெங்காயம் ஏற்றிச் சென்ற இரண்டு படகுகள் மூழ்கின

கிளாலி கடலில் சம்பவம்

தென்மராட்சி, ஜூலை 12

கிளாலியில் இருந்து ஆலங்கேணிக்கு வெங்காயம் ஏற்றிச் சென்ற இரு படகுகள் கடந்த சனி இரவு கடும் காற்றுக் காரணமாக நடுக்கடலில் நீரில் மூழ்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மூழ்கிய படகுகளின் ஓட்டிகள் நால்வர் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த சமயம் அவ்வழியே வந்த வேறு படகுகளின் உதவியால் மீட்கப்பட்டனர்.

இவ்விரு படகுகளிலும் எடுத்துச் செல்லப்பட்ட 28 வெங்காய மூடைகளும் நீரில் மூழ்கின.

மூழ்கிய படகுகளில் ஒன்று நேற்று முன்தினம் கடலில் இருந்து மீட்கப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றும் தென்மராட்சிப் பகுதியில் கடும் காற்று வீசிக் கொண்டிருந்தது. (ஐ-117)

ஆசிரியர் சேவை அமைப்பு உருவாகும்

5 தரங்களில் ஆசிரியர்களை வகுப்பதற்கு அரசு முடிவு

கொழும்பு, ஜூலை 12

நாட்டில் உள்ள சகல ஆசிரியர் சங்கங்களினதும் நீண்டகாலக் கோரிக்கை ஒன்றை நடைமுறைப் படுத்தும் வகையில்—

தற்போதுள்ள சகல தரத்திலான ஆசிரியர்களையும் உள்ளடக்கியதாக இலங்கை ஆசிரியர் சேவை எனும் புதிய அமைப்பு ஒன்றை உருவாக்கவும், பல்வேறு தரத்தில் சம்பளம் பெற்று வரும் ஆசிரியர்களை ஐந்து தரத்தின் கீழ் வகுத்து சம்பளம் வழங்கவும் அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

நடைமுறைப் படுத்தப்படவுள்ள புதிய சம்பளத் திட்டம் வருமாறு:-

1 ஆம் தரம்— ரூ 72,000-108,000 (10 X 3600)
2 ஆம் தரம் ரூ 55,200-72,000 (7 X 2400)
3 ஆம் தரம் - ரூ 42,000-54,600 (2X1200 + 3 X 1800 + 2 X 2400)
4 ஆம் தரம் - ரூ. 36,000-41,400 (5 X 1080)
5 ஆம் தரம்— ரூ 27 000-30,000 (5 X 600)

இப்புதிய சம்பளத் திட்டத்தால் சகல தர ஆசிரியர்களும் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதிபர் நியமனங்கள் குறித்து கல்வி சேவை சபை அறிவிப்பு

கொழும்பு, ஜூலை12

பாடசாலைகளுக்கு அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர், பகுதித் தலைவர் ஆகியோரை நியமிப்பது தொடர்பாக கல்விச்சேவை சபை மாகாண கல்வி அமைச்சுக்களுக்குச் சுற்று நிருப ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

இதன்படி ஒவ்வொரு வகை பாடசாலைகளிலும் மேற்படி பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்கு தகுதிபெற்றோரின் விபரம் வருமாறு:-

தேசிய பாடசாலைகள்

★ அதிபர்கள்:- இலங்கை கல்வி நிர்வாக சேவையில் முதலாம், இரண்டாம் வகுப்பு உத்தியோகஸ்தர்கள்.

★ பிரதி அதிபர்கள்:- இலங்கை கல்வி நிர்வாக சேவையில் இரண்டாம் அல்லது மூன்றாம் வகுப்பு உத்தியோகஸ்தர்கள்.

★ உதவி அதிபர்கள்:- இலங்கை கல்வி நிர்வாக சேவையில் மூன்றாம் வகுப்பு உத்தியோகஸ்தர்கள் அல்லது இலங்கை அதிபர் சேவையில் முதலாம் தர அதிபர்கள்.

★ பகுதித் தலைவர்கள்:- இலங்கை அதிபர் சேவையில் முதலாம் தர அதிபர்கள்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

கடைசி நேரத்தில் ஹேமாவை ஏமாற்றியது ஆளும் ஐ.தே.க!

வேட்பாளர் நியமனம் இன்றி வெறுங்கையுடன் திரும்பினார்

கொழும்பு, ஜூலை 12

பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பாளர் நியமனம் தருவதாக திருமதி ஹேமா பிரேமதாஸாவுக்கு உறுதியளித்த ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி இறுதி நேரத்தில் அவரை ஏமாற்றி விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

வேட்பாளர் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்படுவதை அவதானிக்க தமது ஆதரவாளர்களுடன் நேற்றுக்காலை கொழும்பு செயலகத்துக்குச் சென்றிருந்த ஹேமா பிரேமதாஸா, ஐ. தே. க. வேட்பாளர் பட்டியலில் இருந்து தமது பெயர் நீக்கப்பட்டிருப்பதைக் கண்டு கடும் சீற்றமும் ஏமாற்றமும் அடைந்தார்.

ஏமாற்றமடைந்த ஹேமா கொழும்பு செயலகத்தில் இருந்தவாறே தமது பெயரை ஐ. தே. க. பட்டியலிற் சேர்த்துக்கொள்ள தம்மாலான முயற்சிகள் அனைத்தையும் எடுத்தார் என்றும் —

அவை தோல்வியிலே முடிவடைந்தன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் கோபமடைந்த ஹேமா கவலை தோய்ந்த முகத்துடன் தமது ஆதரவாளர்களுடன் கொழும்புச் செயலகத்தில் இருந்து வெளியேறியதைக் காணக்கூடியதாக இருந்தது என்று ஏஜன்சிச் செய்திகள் தெரிவித்தன.

"ஆளும் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் இருந்து ஹேமாவின் பெயர் நீக்கப்பட்டதற்கு அவரும் ஓரளவு பொறுப்பு ஏற்கவேண்டும்" — என்று பி. பி. ஸி. குறிப்பிட்டது.

"தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக அவர் கடந்த சில வாரங்களாக பல தடவைகள் தமது நிலைப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

வேட்புமனு தாக்கல் செய்யும் இறுதி நாள் நேற்று கலவரம்

அனுராதபுரம், களுத்துறை, புத்தளம், கண்டியில் சம்பவங்கள்

கொழும்பு, ஜூலை 12

பொதுத் தேர்தலுக்கு வேட்பாளர் பட்டியல்களைத் தாக்கல் செய்த இறுதி நாளான நேற்று நாட்டின் பல பகுதிகளிலும் கோஷ்டி மோதல்கள் இடம்பெற்றன என அறிவிக்கப்படுகிறது.

அனுராதபுரத்தில் இடம்பெற்ற மோதலில் 3 பொலிஸார் உட்பட 15 பேர் காயமடைந்தனர். அவர்கள் அனைவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

களுத்துறையில் இடம்பெற்ற இன்னொரு மோதலில் 15 பேர் காயமடைந்தனர். இவர்கள் நாகொட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். காயமடைந்தவர்களில் களுத்துறை மாவட்டத்தில் போட்டியிடும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர்களில் ஒருவரான ரெஜினால் கூரேயும் அடங்குவார் என தெரிவிக்கப்படுகிறது.

புத்தளம் பகுதியில் இடம்பெற்ற மோதலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டு பிரயோகம் செய்ய வேண்டியதாயிற்று என்று சொல்லப்படுகிறது.

கண்டியிலும் பல மோதல் சம்பவங்கள் இடம்பெற்றன என்று அறிவிக்கப்படுகிறது. (உ-எ-6-4)

வீதிகள் எங்கும் நீல, சிவப்பு கொடிகள்

கொழும்பு, ஜூலை 12

பொதுத் தேர்தலுக்கு வேட்பாளர் பட்டியல்களைத் தாக்கல் செய்த இறுதி நாளான நேற்று ஸ்ரீலங்காவின் பல பகுதிகளிலும் நீல, சிவப்பு நிறக் கொடிகள் வீதிகளில் பரவலாகப் பறக்கவிடப்பட்டிருந்தன என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ-எ-6)

வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 12

மட்டக்களப்பில் கடந்த 7 ஆம் திகதி படையினருடன் இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான இரண்டாம் லெப்டினன்ட் மலையப்பன் அல்லது திவாகரராசா (குழந்தைவேல் சிவகுமார் — மட்டக்களப்பு) என்பவர் வீரச்சாவடைந்தார். (ஐ-4)

முச்சந்தி முனி



அம்மணியள் கூட்டு [illegible] ஒரிக்கு வேட்டு [illegible] அங்கோ......!

தமிழீழக் கல்வித் தேர்வு ஓகஸ்ட் 12இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வு எதிர்வரும் ஓகஸ்ட் 12 ஆம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏழு நாட்கள் நடைபெறும் இத்தேர்வு ஓகஸ்ட் 20 ஆம் திகதி முடிவடையும்.

எழுத்துத் தேர்வு பற்றிய அட்டவணை 4 ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வன்னி மாவட்டங்களில் இத்தேர்வு வருடம் தோறும் நடைபெறுவது தெரிந்ததே. (உ)

மேல்மாகாண ஆளுநர்

சுவாமிநாதனின் மகனை குண்டர்கள் தாக்கினர்

கொழும்பு, ஜூலை 12

மேல் மாகாண ஆளுநர் டி. எம். சுவாமிநாதனின் மகன் குண்டர்கள் சிலரினால் கடுமையாகத் தாக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் உள்ள சர்வதேச பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற விருந்து வைபவம் ஒன்றின் போது குண்டர்கள் சிலர் புகுந்து மாணவர்களைத் தாக்கினார்கள் என்றும் —

தாக்குதலில் இருந்து ஒரு மாணவனைக் காப்பாற்ற ஆளுநரின் மகன் முயன்றபோது அவரும் சைக்கிள் செயின்கள், இரும்புக் கம்பிகளினால் தாக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சுவாமிநாதனின் மகனுக்கு அவசர சிகிச்சை அளிக்கப்பட்டது.

இச்சம்பவம் பற்றி தகவல் வெளியிட மறுத்த ஆளுநர் சுவாமிநாதன் — இது விஷயத்தை ஜனாதிபதி விஜேதுங்காவின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார் என்று தெரிகிறது. (எ)

கிளிநொச்சியில் இன்று கலைபண்பாட்டு விழா

கிளிநொச்சி, ஜூலை 12

கிளிநொச்சி மாவட்ட தமிழ்மொழி, கலை பண்பாட்டு விழா இன்று கிளிநொச்சி [illegible] நடைபெறவுள்ளது.

தமிழ் மொழியினதும் தமிழர் கலை பண்பாட்டினதும் பெருமையை எடுத்துக்காட்டும் பல்வேறு நிகழ்வுகள் [illegible] இடம்பெறவுள்ளன தமிழுக்கு பெருமை சேர்க்கும் நூல்கள் பல அலங்கரிக்கப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

பிரதமர் ரணிலுடன் நேரில் பேசியும் பார்த்தார் ஹேமா!

தமது பெயர் ஐ. தே. க. வேட்பாளர் பட்டியலில் இல்லை என்பதை நேற்றுக் காலை கொழும்பு செயலகத்தில் வைத்து அறிந்து கொண்ட ஹேமா பிரேமதாஸா, தமது பெயரை பட்டியலில் சேர்த்துக் கொள்ள அங்கிருந்தவாறே பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது.

கொழும்பு செயலகத்தில் வேட்பாளர் பட்டியலைத் தாக்கல் செய்ய வந்திருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐ. தே. க. பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா ஆகியோருடன் ஹேமா பிரேமதாஸா நேரில் பேச்சு நடத்தியும் அவரது முயற்சி பலனளிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

வேட்புமனுவைத் தாக்கல் செய்வதற்கான காலம் கடந்து விட்டது எனக் காரணம் கூறி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஹேமாவின் கோரிக்கையைத் தட்டிக் கழித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தம்மையும் மகளையும் ஐ. தே. க ஏமாற்றிவிட்டதாக ஹேமா நேற்று குற்றம் சாட்டினார். (உ-எ-ஐ-6)

விதவைப் பெண்மணிகள் நால்வரும் ஓரணியில்?

கொழும்பு, ஜூலை 12

ஆளும் ஐ. தே. கட்சியினால் ஹேமா பிரேமதாஸா ஏமாற்றப் பட்டிருப்பதாகக் கூறப்படுவது, ஸ்ரீலங்கா அரசியலில் ஈடுபட்டுள்ள — முன்னாள் அரசியல் தலைவர்கள் நால்வரின் மனைவிமார்களான — நான்கு விதவை பெண்மணிகளை எதிரணிக் கூட்டின் கீழ் ஒன்று சேர்க்க வழிவகுக்கக் கூடும் என அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

வன்முறையில் உயிரிழந்த பண்டாரநாயக்கா, விஜேகுமாரணதுங்க, லலித் அத்துலத்முதலி, பிரேமதாஸா ஆகியோரின் மனைவிமாரே ஓரணியில் வரும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

சிறிமாவோ பண்டாரநாயக்கா, சந்திரிகா விஜேகுமாரணதுங்க, சிறிமானி அத்துலத்முதலி ஆகியோர் ஏற்கனவே பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் கீழ் ஒன்றிணைந்துள்ளனர்.

ஆளும் கட்சியின் போக்கினால் கடும் சீற்றம் கொண்டுள்ள ஹேமா பிரேமதாஸாவும் எதிரணியில் சேர்ந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று அவதானிகள் குறிப்பிட்டனர்.

சந்திரிகா குமாரணதுங்கா கம்பஹாவில் போட்டி!

கொழும்பு, ஜூலை 12

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்பாளர் பட்டியலை திருமதி சந்திரிகா குமாரணதுங்கா நேற்று கொழும்பு செயலகத்தில் சமர்ப்பித்தார்.

சுமார் 25 ஆயிரத்துக்கு அதிகமான ஆதரவாளர்கள் சகிதம் சந்திரிகா கொழும்புச் செயலகத்துக்கு வந்திருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் கம்பஹா மாவட்ட வேட்பாளர் பட்டியலில் முதலாவது வேட்பாளராக சந்திரிகாவின் பெயர் இடம்பெற்றுள்ளது. (உ-எ-6)

சந்திரிகாவுக்கு பயந்து ரணில் கொழும்பில் போட்டி

கொழும்பு, ஜூலை 12

சந்திரிகா குமாரணதுங்க கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடுவதை அடுத்து அவருடன் நேரடியாகப் போட்டியிடுவதைத் தவிர்ப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தாம் போட்டியிடும் தேர்தல் மாவட்டத்தை கொழும்புக்கு மாற்றிக்கொண்டார் என்று கூறப்படுகிறது.

நேற்று தாக்கல் செய்யப்பட்ட— கொழும்பு மாவட்டத்துக்கான— ஐ. தே. க. வேட்பாளர் பட்டியலில் ரணிலின் பெயர் முதலாவதாக இருந்தது.

1977 பொதுத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் உள்ள பியகம தொகுதியில் போட்டியிட்ட ரணில், கடந்த பொதுத் தேர்தலிலும் கம்பஹா மாவட்டத்திலேயே போட்டியிட்டார்.

இம்முறை அவர் தமது இடத்தை கொழும்பு மாவட்டத்துக்கு மாற்றிக் கொண்டு விட்டார். (உ-எ-6)

கொழும்பில் ரெலோ போட்டி

கொழும்பு, ஜூலை 12

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்திலும் போட்டியிட 'ரெலோ' அமைப்பு நேற்று வேட்பாளர் பட்டியலைத் தாக்கல் செய்தது.

இப்பட்டியலில் இடம்பெற்றுள்ள எம். கனகராஜா என்பவர் தகவல் தெரிவிக்கையில்—

ஐ. தே. கவோ அல்லது சு. கவோ தமிழர் பிரச்சினைக்கு எந்த தீர்வையும் வழங்கக்கூடிய நிலையில் இல்லை. எனவே தான் ரெலோ கொழும்பில் போட்டியிடுகின்றது"— என்று சொன்னார். (உ-எ-6)

களத்தில் 31 கட்சிகளுடன் பல சுயேச்சைக் குழுக்கள்

கொழும்பு, ஜூலை 12

எதிர்வரும் நாடாளுமன்றப் பொது தேர்தலில் போட்டியிடுவதற்காக நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் 31 அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் அந்தந்த மாவட்டச் செயலகங்களில் வேட்பாளர் பட்டியல்களை தாக்கல் செய்தன என்று அறிவிக்கப்படுகிறது.

2 ஆயிரத்துக்கு அதிகமான வேட்பாளர்கள் இத்தேர்தலில் போட்டியிடுகின்றனர். (உ-எ-6-4)

உலகக்கிண்ண அரையிறுதிக்கு

பல்கேரியா, இத்தாலியுடன் சுவீடன், பிரேஸில் தெரிவு

நியூயோர்க், ஜூலை 12

உலகக்கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இரண்டும் நாளை புதன்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

முதலாவது அரைஇறுதிப் போட்டியில் பல்கேரியாவும் இத்தாலியும் மோதுகின்றன.

இரண்டாவது அரைஇறுதிப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

Japan Asia சைக்கிள் ஆண்களுக்குரியது. விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: கோபால கிருஷ்ணன், நச்சார் அம்மன் கோயில் வீதி (சிவாஸ் ஐஸ்கிறீம் கம்பனி அருகில்), கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (31869)

Inter Come (அலுவலகத் திற்கு உரியது) (ஜேர்மன் தயாரிப்பு) Philips 3 Speakers (மண்டபங்களுக்கு உரியது) (12W - 8. Ohms 100V) தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: "Zamsiva", கல்வியங்காடு சந்தை முன்பாக, யாழ்ப்பாணம். (31851)

காணி விற்பனைக்கு

சாவகச்சேரி பெருங்குளம், சங்கத்தானை வீதியில் அமைந்துள்ள 15 (பதினைந்து) பரப்பு பயனுள்ள காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: J. S. T. Stationery - ஜெய. க. தா. காகிதாதிகள், இல. 15, கண்டி வீதி, கோட்டடி, சாவகச்சேரி. (31864)

இலங்கை திருமண சேவை

29 வயது, கார்த்திகை, செவ்வாய் பற்ற, UK இல் சொந்த வியாபாரம் நடத்தும் பவருக்கு காரைநகரைச் சார்ந்த மணப்பெண் U.K இல் அல்லது இலங்கையில் தேவை. தொடர்பு து. விமலா, யாழ் நாச்சிமார் கோயிலடி. (31866)

36 வயது, ஆயிலியம், செவ்வாய் பற்ற Computer Programmer அபுதாபி வதிவிட உரிமையுள்ளவருக்கு அழகான Computer/Accountant பயின்ற மணப்பெண் தேவை. தொடர்பு: து. விமலா, யாழ். நாச்சிமார் கோயிலடி. (31867)

SPOKEN ENGLISH

Spoken English with Grammar. Enelish Literature Higher English and Toefl கற்பிக்கப்படுகிறது. V. N. Kandasamy A.I.B. Part I (London) Inter (London) Dip - in - English 87, திருநெல்வேலி றோட், (ரயில் கடவைக்குச் சமீபமாக), கொக்குவில். (7519)

சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவசாயம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகலாமா? நோய் தீருமா? கடன் நீங்குமா? கவலைகள் ஒழியுமா? கேட்டுப் பாருங்கள். த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோயில் வீதி, நல்லூர் வடக்கு. (31861)

பெயர்மாற்றம்

ஸ்ரீலங்கா அச்சகம், ஸ்ரீகாந்தா அச்சகம் ஒன்றிணைந்து இலங்கைப்பதிப்பகம் என்ற பெயரில் சேவையாற்றுகிறது. இலங்கைப் பதிப்பகம், பதிப்பகசாலை, ராஜா தியேட்டர் அருகில், யாழ்ப்பாணம். (31668)

இடமாற்றம்

ஓட்டுமடம் பொன்னப்பா ஒழுங்கையில் இயங்கிவந்த எனது வைத்தியசாலை தற்பொழுது யாழ். வைத்தீஸ்வரக் கல்லூரி சந்திக்கு அருகாமையில் (சிவன் வடக்கு வீதி) இயங்கிவருகிறதென்பதை அறியத் தருகிறேன். வைத்தியர் சிவசம்பு. (31858)

தேர்தல் விதிகளை மீறியதாக 18 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூலை 12 தேர்தல் விதிகளை மீறிய 18 சம்பவங்கள் பற்றிய முறைப்பாடுகள் நேற்று முன்தினம்வரை கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அனைத்து அரசியல் கட்சிகளுக்கு எதிராகவும் இம்முறைப்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக தேர்தல் செயலக சிரேஷ்ட அதிகாரி பீ. நீக்லஸ் தெரிவித்தார்.

அச்சுறுத்தல், கொடிகள் வெட்டப்பட்டமை, உடைமைகளுக்குச் சேதம் விளைவித்தமை போன்ற குற்றச்சாட்டுகளும் அந்த முறைப்பாடுகளில் அடங்கியுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். [இ-ஐ-6]

ஓம் விராட் விஸ்வப் ப்ரஹ்மனே நம
யாழ். வண்ணை - கன்னாதிட்டி

அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்

பவ வருட
(1994ஆம் ஆண்டு)

மஹோற்சவ விஞ்ஞாபனம்

13-07-94	காலை	10-48 மணி	கொடியேற்றம்
20-07-94	மாலை	4-30 மணி	சப்பரம்
21-07-94	காலை	9-00 மணி	தேர்த்திருவிழா
22 07-94	காலை	8-00 மணி	தீர்த்தோற்சவம்
23-07-94	மாலை	4-00 மணி	பூங்காவனம்

(தேர்த்திருவிழா பொது உபயம்)

— தேவஸ்தான ஆதீனகர்த்தாக்கள்.

[31865]

விற்பனைக்கு

இரும்புத் தகடுகள் 8 X 4 சதுர அடி
தண்ணீர்த் தாங்கிகள் 8 X 8 X 4 கன அடி
4 X 4 X 4 கன அடி
12 அடி நீளஉருளை வடிவம்

வான்கள் - ஒஸ்ரின் L. D வான்
கேம்பிரிட்ஜ் டிலிவரி வான்
B M C லொறி என்ஜின்

தொடர்பு:

மில்க்வைற்,
525/2 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-8628)

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

ஜனனம்:
07
—
10
—
1947

அஸ்தமனம்:
03
07
1992

அமரர் சின்னத்துரை தர்மலிங்கம்

(குலம்)

திதி: 12 - 07 - 1994

ஆண்டுகள் இரண்டு அகன்றாலும்;
உங்கள் அன்பு எம்மை விட்டகலாது.

தங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நீங்காத நினைவுகளுடன்!
ச. சின்னத்துரை சேமன்-
குடும்பத்தினர்.

"விஷ்ணு மகால்",
பளை.

[சி-8623]

ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
09
08
1930

மறைவு:
23
06
1993

திருமதி பாலசிங்கம்

(பேபி)

திதி: 12 - 07 - 1994

அன்பொடு எம்மை நீவிர்
அரவணைத் தமுத மூட்டி
இன்புற்று வாழ்ந்த கதை
இனியும் காண்போமா?
விண்புலம் நோக்கி அன்று
விரைந்து நீர் சென்ற காட்சி
எம் மனத் திரையில் காண
தேம்பி நாம் அழுகின்றோமே

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்புக் கணவர், மகள்,
பெறாமக்கள், சகோதரிகள்.

மகாத்மா வேள்,
குருந்தட்டி,
நெல்லியடி, கரவெட்டி.

[31871]

உ
கோப்பாய்
பலானை கண்ணகை அம்மன் கோயில்

வருடாந்த அலங்காரத் திருவிழா

வருடாந்த அலங்காரத் திருவிழா உற்சவம் 13-07-1994 புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் நடைபெற திருவருள் பாலித்துள்ளது.

17-07-94	ஞாயிறு	மஞ்சத்திருவிழா
21-07-94	வியாழன்	தேர்த்திருவிழா
22-07-94	வெள்ளி	தீர்த்தத்திருவிழா

— கோயில் பரிபாலன சபையினர்.

(31870)

உ
சிவமயம்
அருள்மிகு தாவடி

ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி கோயில்

(முருகமூர்த்தி கோயில்)

வருடாந்த மஹோற்சவம்

முக்கிய உற்சவங்கள்

கொடியேற்றம்	13 — 07 — 1994 புதன்
வேட்டைத் திருவிழா	20 — 07 — 1994 புதன் தாவடி ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் கோயில் முன்றிலில் வேட்டைத் திருவிழா.
சப்பரத் திருவிழா	20 — 07 — 1994 புதன்
தேர்த் திருவிழா	21 — 07 — 1994 வியாழன்
தீர்த்தத் திருவிழா	22 — 07 — 1994 வெள்ளி
திருக்கல்யாணம்	23 — 07 — 1994 சனி
அலங்காரப் பெரு விழா	24 — 07 — 1994 ஞாயிறு

தினமொரு தெய்வீகக் கதை

வழங்குபவர்கள்:
சந்நிதி த. சிவகுமாரன்
(அமைப்பாளர், காரைநகர் கம்பன்கழகம்
ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

காலமும்	கருத்தும்
13 - 07 - 94 —	மீனாட்சி கல்யாணம்
14 - 07 - 84 —	தமிழ்மகள் சொல்லமுதம்
15 - 07 - 94 —	சூடிக் கொடுத்த சுடர்க்கொடி
16 - 07 - 94 —	அன்பறாது என் நெஞ்சு அவர்க்கு
17 - 07 - 94 —	மங்கையர்க்குத் தனியரசி
18 - 07 - 94 —	பணியேன் ஒருவரை
19 - 07 - 94 —	மாறிலா வள்ளி வாழ்க

திரு. பொ. இராசகுலேந்திரன்
(பிரதி அதிபர், மகாஜனாக் கல்லூரி தெல்லிப்பழை)

20 - 07 - 94 —	தர்மர் காட்டும் வாழ்க்கைநெறி
21 - 07 - 94 —	சிவனடியார் பெருமை
22 - 07 - 94 —	மனக்கோயில்

[சி-8627]

இணுவில்
பரராஜசேகரப் பிள்ளையார் கோயில்

ஆனி சதுர்த்தி திருவிழா

12 07 94 1008 கலச சங்காபிஷேகம்
பகல் 12 மணி தொடக்கம் நடைபெறும்,
விசேட மேளக் கச்சேரிகளும்,
சிறப்புச் சொற்பொழிவு இரவு 8-30
திருவாசகம் என்னும் தேன்
கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ்

சி. பஞ்சாட்சரம்,
இணுவில்.

[7264]

31ஆம் நாள் நினைவஞ்சலி

அந்தியேட்டி அழைப்பும் நன்றிநவிலலும்

மண்ணில்:
17
—
03
—
1961

விண்ணில்:
12
—
06
—
1994

கந்தசாமி சௌபாக்கியவதி (ஜெயா)

12-06-1994 அன்று எமையெல்லாம் தவிக்கவிட்டு மீளாத்துயில் கொண்ட நமது சகோதரி சௌபாக்கியவதி (ஜெயா) அவர்களின் மரணச்சடங்கில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், நேரில் வந்து கொண்டவர்களுக்கும் நாம் என்றும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

அத்துடன் இன்றையதினம் (12 - 07 - 94) நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும், சபிண்டிக்கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

குடும்பத்தினர்

[illegible],
உடுப்பிட்டி.

(31877)

குருக்கள், அர்ச்சகர் தேவை

சங்கத்தானை இத்தியடி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்திற்கு குருக்கள் / அர்ச்சகர் தேவை. 20 - 07 - 1994 ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும். (குருக்களுக்கு முன் உரிமை வழங்கப்படும்)

தேவஸ்தானம், பரிபாலன சபை

(31878)

உ
சுழிபுரம் - பறாளாய்

ஈசுர விநாயகர் தேவஸ்தானம்

நாளை தேர்த் திருவிழா...

தக்க தருணமையா - தமிழீழ மக்களை - - -

தக்க தருணமையா — தமிழீழ
மக்களைக் காத்திடத் தக்கதருணமையா
துக்கசாகரத்திலாழ்ந்து தினமும்
துயரமுறுகின்றார் தூயகணநாதா
திக்கெலாம் புகழும் தேசுநிறை பறாளை
தர்கபழம் பதித் தங்கரதம் — ஏறும்
தமிழீழத்தின் ஈசுர விநாயகனே:

விடி விளக்குகள் - 108

இடம்பெயர்ந்து அலைந்து திரியும் மக்கள் மீண்டும் தம் இல்லங்களுக்கு விரைவில் சென்றிட ஈசுர விநாயகனின் அருள் வேண்டி தேர்த்தினமாகிய நாளை இரவு 7-00 மணியளவில் விடிவிளக்குகள் 108 ஏற்றிவைக்கப்படும்.

அனைவரையும் அழைக்கின்றோம்

சோழியூரான்
பிறைதுடிக்குரு
(சந்நிதிப் பூசகர்)

(31876)

5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
20
—
04
—
1949

மறைவு:
12
—
07
—
1989

அமரர்

மரியாப்பிள்ளை வில்லியம் ஜெயராஜா

(நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனிக்குளம்)

அன்புத் தெய்வமே!
ஐந்தாண்டு முடிந்தாலும், உம்முகம் நிழலாடுதையா!
எம் உயிர் இருக்கும் வரை, உம் உயிர் அழியாதையா!

உம் பிரிவில்:
அன்பு மனைவி, ஆசைமகள்,
அம்மா, சகோதரர்கள்,
மாமா, மைத்துனர்.

சில்லாலை,
பண்டத்தரிப்பு.

[31872]

---

31 ஆம் நாள் நினைவஞ்சலி

செல்வி சரோஜினி தில்லையம்பலம்

(முன்னாள் சிரேஷ்ட பகுதித் தலைவர்)

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச்சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,

யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

(31873)

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

சிங்கள வாக்காளர் கேட்பார்களா?

உங்கள் வீட்டுக் கதவைத் தட்டிக் கொண்டு அரசியல் வாதிகள் வருவார்கள். அப்போது அவர்களிடம், "யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் தீர்வு உங்களிடம் உண்டா?" என்பதனையே முதற்கேள்வியாகக் கேளுங்கள்.—

வறக்காப் பொலையில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில், "யுக்திய" சிங்கள வார இதழின் ஆசிரியர் சஜீவ் திசநாயக்கா அப்பகுதி மக்களிடம் இவ்வாறு ஒரு வேண்டுகோளை விடுத்தார்.

அரசியல் வாதிகளிடம் மக்கள் நேருக்கு நேர் துணிச்சலுடன் கேள்வி கேட்கக் கூடிய ஒரேயொரு சந்தர்ப்பம் ஆறு வருடங்களுக்கு ஒரு முறை தான் கிடைக்கும். வேட்பாளர்கள் வாக்கு வேட்டையாடி வீட்டுக்கு வரும் வேளையே அது. அதற்குப் பின்னர் தோற்றவர்கள் ஒருபுறம் போய் ஒதுங்க, வெற்றி பெற்றவர்கள் தாம் நினைத்ததைச் செய்து மக்களை வருத்துவார்கள்.

இப்போது தென்னிலங்கையின் சாதாரண மக்களைப் பெரிதும் வருத்துவது வடக்கு — கிழக்கில் நடைபெறும் யுத்தமே. தென்னிலங்கையின் கிராமங்களைச் சேர்ந்த எதிர்காலச் சந்ததியினரான இளைஞர்கள் யுத்த களத்தில் அகாலமே மடிகின்றனர். அதனால் யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் கிராமப் புறங்களைச் சேர்ந்த பொதுமக்களே.

ஆனால் அவர்களிடம் வாக்குத் தேடிச் செல்லும் அரசியல்வாதிகள் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில் சிறிதேனும் அக்கறை கொள்வதாக இல்லை. அதற்கு மாறாக யுத்தத்தைக் காரணம் காட்டி நாட்டை ஆளலாம் என்ற நினைப்புடனேயே செயற்படுகிறார்கள்.

இதுவரை ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர விரும்பவில்லை. அந்தகைய விருப்பம் இருந்திருப்பின் தேர்தலை யொட்டியேனும் யுத்த நிறுத்தமாவது செய்திருக்கும்.

எதிரணியிலுள்ள சுதந்திரக் கட்சியோ அதன் கூட்டணியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியோ தானும் ஆட்சிக்கு வந்தால் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவது குறித்துத் திட்டவட்டமான, தெளிவான நிலைப்பாடு எதனையும் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. இதுவரை அது குறித்து பொதுக்கூட்டங்களிலோ செய்தியாளர்கள் மாநாடுகளிலோ மூச்சும் விடவில்லை.

சந்திரிகா சரி, ஸ்ரீ. ல. சு. கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா சரி, பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளர் டி. எம். ஜயரத்ன சரி, தமது அணி ஆட்சிக்கு வந்தால் விடுதலைப் புலிகளுடன் பேசுவதாகக் கூறுகிறார்களே அன்றி யுத்தத்தை நிறுத்துவதாகச் சொல்லவில்லை.

ஆகையால், தங்கள் வீடு தேடி வரும் அரசியல் வாதிகளிடம் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரக்கூடிய தீர்வு எதுவும் உண்டா என்று கேட்க வேண்டிய நிலையிலேயே சிங்கள வாக்காளர்கள் உள்ளனர். தேர்தல் மேடைகளில் அடுக்கு மொழியில் கவர்ச்சிகரமாகப் பேசி, நிறைவேற்றமுடியாத வாக்குறுதிகளை எல்லாம் அள்ளி வீசி வாக்காளர்களை ஏமாற்றும் "ஜம்பம்" இம்முறை தெற்கில் அதிகம் பயன்தராது என்று சொல்லப்படுகிறது.

சிங்கள மக்கள் தங்கள் வாக்கு வல்லமையைப் பயன்படுத்தி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு, அதனை நிறுத்தி தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வையே காணுமாறு தமது அரசியல் வாதிகளை நிர்ப்பந்திப்பார்களானால் இலங்கையின் சரித்திரத்திலேயே மிகவும் பெறுமதியான சாதனை ஒன்றை நிலைநாட்டியவர்கள் ஆவர்.

அத்தகு சாதனை படைக்கும் அரசியல் பக்குவத்தைச் சிங்கள மக்கள் எய்திவிட்டார்களா என்பதனைத் தேர்தல் முடிவு மட்டுமல்ல, தன் பின்னர் அமையும் ஆட்சியின் செயற்பாடும் எடுத்துக்காட்டும்!

காங்கேசன்துறையில் கப்பல்கள் சோதனை:

கொழும்பில் செஞ்சிலுவை அதிகாரி பாதுகாப்பு அமைச்சுடன் பேச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 12

வடக்கே வரும் கப்பல்கள் யாவும் காங்கேசன்துறைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு கடற்படையினரின் சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றமுடிவு குறித்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேச சக்குழு கொழும்பு அலுவலக அதிகாரி பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி வருவதாக அறிய வருகிறது.

கொழும்பில் இருந்து பொருள்கள் ஏற்றி வரும் சரக்குக் கப்பல்களும் —

திருகோணமலையில் பயணிகளை ஏற்றி வரும் கப்பல்களும் —முதலில் காங்கேசன் துறைக்கு வந்து படையினரின் சோதனையை முடித்துக் கொண்டே பருத்தித்துறைக்கு செல்ல வேண்டும் என்று படையினர் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

புதிய நடைமுறையால் கப்பல் சேவைகள் தாமதமாவதால் அந்த நடைமுறையை நீக்க ஏற்பாடு செய்யுமாறு செஞ்சிலுவைச் சங்க சர்வதேச சக்குழு அதிகாரி பாதுகாப்பு அமைச்சைக் கேட்டு தொடர்ந்து பேச்சு நடத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

தேர்தல் கருத்துக் கணிப்பு; அமெ. நிறுவனம் நடத்தும்

கொழும்பு, ஜூலை 12

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தல் குறித்து முன் கூட்டியே கருத்துக் கணிப்பு ஒன்றை நடத்த அமெரிக்க நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது

கொழும்பில் இருந்து வெளியாகும் "சண்டே டைம்ஸ்" வார இதழுடன் இணைந்து இக் கருத்துக்கணிப்பை அந்த அமெரிக்க நிறுவனம் நடத்தவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மூவாயிரம் வாக்காளர்களைச் சந்தித்து இக் கருத்துக் கணிப்பு நடத்தப்படும் என்றும் —

வடக்கு மாகாணம் இக் கருத்துக் கணிப்பில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது என்றும் கொழும்புச் செய்திகளை மேற்கோள்காட்டி வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (ஒ-எ)

சுவரொட்டிகள் ஒட்ட வவுனியாவில் தடை!

கொழும்பு, ஜூலை 13

வவுனியாவில் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் மதில்களில் சுவரொட்டிகளை ஒட்டக்கூடாது என உத்தரவிடப்பட்டுள்ளது.

அண்மையில் தேர்தலை முன்னிட்டு வவுனியா செயலகத்தில் இடம்பெற்ற பாதுகாப்பு தொடர்பான மாநாட்டில் இவ்வாறு முடிவு எடுக்கப்பட்டது.

இம் மாநாட்டில் சிவில் அதிகாரிகள், பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் இராணுவ அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தேர்தல் காலத்தில் வவுனியாவில் பாதுகாப்பை பலப்படுத்துவது தொடர்பாகவும் இங்கு ஆராயப்பட்டது.

பொதுச்செயலராக பணிபுரியக் கூடாது

செல்லச்சாமிக்கு எதிராக நீதிமன்றம் தடை உத்தரவு

கொழும்பு, ஜூலை 12

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளராகத் தொடர்ந்தும் பணிபுரியக் கூடாது என்று எம். எஸ். செல்லச்சாமிக்கு கொழும்பு மாவட்ட நீதிபதி தடை உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

கடந்த 27 ஆம் திகதி கண்டியில் நடந்த இ. தொ. காவின் தேசிய சபை பொதுச் செயலாளர் பதவியில் இருந்து செல்லச்சாமியை நீக்கிவிட்டு, அமைச்சர் தொண்டமானின் பேரர் ஆறுமுகம் தொண்டமானை அப்பதவிக்கு நியமித்தது.

அதன் பிறகும் திரு. செல்லச்சாமி பொதுச் செயலாளர் தானே என்று கூறிச் செயற்பட்டு வந்தார். அப்படி செயற்படுவதைத் தடுத்து நிறுத்தும்படி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தது.

அந்த மனு மீது நீதிபதி திரு. சேரமவன்ஸ முன்கண்ட தடை உத்தரவைப் பிறப்பித்தார். (ஒ-எ)

இலங்கைத் தமிழ் அகதிகளின்

தஞ்சம் கோரும் மனுக்களை சுவிஸ் மீண்டும் நிராகரித்தது

சுவிட்ஸர்லாந்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் தஞ்சம் கோரும் மனுக்களை நிராகரித்து, இரண்டாவது கடிதங்களையும் சுவிஸ் அரசு அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

இதனையடுத்து பேர்ன் நகரில் தஞ்சம் கோரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டோரின் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் சுவிஸ் பிரஜைகளும் பங்கு பற்றினர். இலங்கைத் தமிழ் அகதிகள் சுவிஸ் பிரஜைகளின் அனுதாபத்தைத் தேடும் முயற்சிகள் தற்போது நடந்து வருகின்றனவாம். (ஈ)

விளையாட்டு நிகழ்வுகள்

அரியாலை சரஸ்வதி நூல் நிலையத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அழைக்கப்பட்ட கழக அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்டுவந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதி மற்றும் இறுதியாட்டங்கள் இன்று பிற்பகல் 2.30 மணி முதல் அரியாலை மத்திய விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

அரையிறுதியாட்டத்தில் பங்குபற்றும் அணிகள்:-

★ ஷப்றா வி. க. அணி எதிர் பத்ரீஷியன் வி. க. அணி

★ யாழ் பல்கலைக்கழக அணி எதிர் மானிப்பாய் பரிஷ் வி. க. அணி (உ)

★ ★ ★

யாழ் மாவட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்றுவரும் வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

வேம்படி மகளிர் மைதானம்

★ 17 வயது— சண்டிக்குளி மகளிர் அணி எதிர் கன்னியர்மடம் மகளிர் அணி;

★ 19 வயது— சண்டிக்குளி மகளிர் அணி எதிர் கனகரத்தினம் ம. ம. வி. அணி

சண்டிக்குளி மைதானம்

★ 17 வயது— வேம்படி மகளிர் அணி எதிர் கனகரத்தினம் ம. ம. வி. அணி

★ 19 வயது — கன்னியர் மடம் மகளிர் எதிர் அணிவேம்படி மகளிர் அணி.

அத்தியார் இந்து மைதானம்

★ 17 வயது— வட. இந்து மகளிர் அணி எதிர் உடுவில் மகளிர் அணி மற்றும் சண்டிலிப்பாய் இந்து அணி எதிர் மெதடிஸ்த மகளிர் அணி.

★ 19 வயது — வட இந்து மகளிர் அணி எதிர் மெதடிஸ்த மகளிர் அணி. (ஐ)

★ ★ ★

நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் "பாரதி" கேடயத்துக்காக யாழ் மாவட்ட மட்டத்தில் நடத்தும் "செற்அப்" முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 3.30 மணி —பாரதி வி. க.'ஏ' அணி எதிர் அச்சுவேலி ஏ. எஸ் ஸி. அணி.

★ பிற்பகல் 4.30 — பாரதி வி. க. "பி" அணி எதிர் [illegible] விக்கினேஸ்வரா [illegible] அணி. (ஐ)

கரும்புலிகள் 114 பேர் கொழும்பில் கைதாம்!

கொழும்பு, ஜூலை 12

கொழும்பில் இதுவரை இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கைகளின் போது கரும்புலி உறுப்பினர்கள் 114 பேர் கைது செய்யப்பட்டுள்ளனராம்!

மாளிகாவத்தையில் 45 பேரும், நாரஹேன்பிட்டியில் 21பேரும், மருதானையில் 80பேரும், கிருலப்பனையில் 10 பேரும் மற்றும் கொழும்பின் பல்வேறு பகுதிகளில் ஏனையவர்களும் கைது செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வத்தளை ஹுணுப்பிட்டியில் 85கிலோ வெடி மருந்துகள் ஒரு வீட்டிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டதாகவும். இந்த வீட்டிலிருந்து ஏற்கனவே ஆயுதங்கள் பல கைப்பற்றப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. (ஒ-3)

கொரிய உயர் தலைவர்களின் உச்சிமாநாடு ஒத்திவைப்பு

சோல், ஜூலை 12

தென் கொரியா — வட கொரியா ஆகியவற்றின் உயர் தலைவர்களுக்கு இடையே இம் மாதம் 25ஆம் திகதி நடைபெறவிருந்த உச்சி மாநாடு ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. தென் கொரியாவின் எல்லைப்புறக் கிராமம் ஒன்றில் இந்த உச்சி மாநாடு நடைபெற இருந்தது.

வடகொரிய ஜனாதிபதி கிம் இல் சுங்கின் மரணம் காரணமாக இம் மாநாடு ஒத்திவைக்கப்படுவதாக வடகொரியா அறிவித்தது.

இதேவேளை - வட கொரியா அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபடுவது தொடர்பாக வடகொரிய, தென் கொரிய மற்றும் அமெரிக்க தலைவர்களுக்கு இடையே ஜெனிவாவில் நடைபெற இருந்த பேச்சுக்களும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. [ஒ-எ]

தமிழ் மீனவர்கள் தடுத்து வைப்பு

மட்டக்களப்பு, ஜூலை 12

கடந்த இரண்டாம் திகதி அன்று மட்டக்களப்பு தாந்தாமலை புனிதனாவிக் குளத்தில் மீன் பிடிக்கச் சென்ற இரு தமிழ் மீனவர்கள் புனிதனாவிக் குளம் முகாம் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை விடுதலை செய்யுமாறு இவர்களது உறவினர்கள் இராணுவத்தினரைக் கேட்டனர்.

இருவரும் மட்டக்களப்பிற்கு கொண்டு செல்லப்பட்டு விட்டனர் என்று இராணுவத்தினர் கூறியுள்ளனராம். (இ-4)

கொத்தணி அதிபர் விவரம்

யாழ்ப்பாணம் ஜூலை 12

1993ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதிக்கு முன் ஒரு வருட கொத்தணி அதிபர் சேவையை உடைய பாடசாலை கொத்தணி அதிபர்களாகச் சேவையாற்றியவர்கள், சேவை விவரங்களைத் தங்கள் கோட்டங்களில் பிரக் கல்விப் பணிப்பாளர்களிடம் சமர்ப்பிக்கும்படி யாழ். கல்வி வலயம் ஒன்றின் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதற்கான படிவங்களை கோட்டக் கல்வி அலுவலகங்களில் சேகரித்துக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)

நற்சிந்தனை பாதயாத்திரை

யாழ்ப்பாணம், ஜூலை 12

யோகசுவாமிகள் மகளிர் ஆச்சிரம 25 ஆவது ஆண்டு விழாவை ஒட்டி நற்சிந்தனை பாதயாத்திரை நேற்று திங்கட்கிழமை முதல் புதன் கிழமை வரை — மூன்று நாட்கள் நடைபெறும்.

இன்று மாலை 4 மணிக்கு சிவதொண்டன் நிலையத்திலிருந்து புறப்பட்டு அரசடி வீதி வழியாக யோகசுவாமிகள் ஞானம் பெற்ற நல்லூர்த் தேரடியை அடையும்; நாளை காலை 5 மணிக்கு நல்லூரிலிருந்து புறப்பட்டுக் கச்சேரி- நல்லூர் வீதி வழியாக மாம்பழம் சந்தியைக் கடந்து கொழும்புத்துறையில் யோகசுவாமிகள் வாழ்ந்த திருக்கோயிலைத் தரிசித்து மகளிர் ஆச்சிரமத்தை அடையும்.

ஆனி உத்தரப் பூசைகளும் திருவடி வழிபாடு எதிர்வரும் வியாழக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி [illegible] பகல் 12 மணிக்கு [illegible] (க-30)

திருப்பதி தங்கத்தேர் ரூ 2 கோடி செலவில்!

சென்னை, ஜூலை 12

திருப்பதி ஸ்ரீ வெங்கடேஸ்வரர் ஆலயத்தின் தங்கரதம் இரண்டு கோடி ரூபா செலவில் உருவாக்கப்பட்டு வருகிறது.

தங்கரத வேலைகள் யாவும் பூர்த்தியாகும் நிலையில் உள்ளன.

எதிர்வரும் நவம்பர் மாதம் 29 ஆம் திகதி நடைபெறவுள்ள பிரம்மோற்சவத்துடன் இத் தங்கரதம் ஆலய சேவைக்கு விடப்படும் என அறிவிக்கப்படுகிறது.

28 கிலோ கிராம் எடையுள்ள 24 கரட் தங்கம், ஆயிரத்து 100 கிலோ கிராம் செம்பு, பல தொன்கள் எடையுள்ள மைசூர் தேக்கு மரம் ஆகியன இத் தங்கரதத்துக்கு உபயோகிக்கப்பட்டுள்ளன.

மிக நுட்பமான வேலைப்பாடுகள் நிறைந்த இத் தேரின் தங்கத் தகடு மேல் பொருத்தப்பட்ட செப்புத் தகடுகளைப் பதிக்கும் வேலை தமிழ் நாடு அரசால் நடத்தப்படும் கைப்பணிப் பொருள்கள் அபிவிருத்திக் கூட்டுத் தாபனமான பூம்புகாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதற்கான தொழிலாளர் கூலி 25 லட்சம் ரூபாவாகும். தேரின் உயரம் 26½ அடியும் அகலம் 7.8 அடியும் ஆகும். (ஒ-ச)

கொழும்புத் தமிழ்ச் சங்க ஆய்வுக் கட்டுரைப் போட்டி

கொழும்பு, ஜூலை 12

கொழும்புத் தமிழ்ச் சங்கம், அதன் 1994 ஆம் ஆண்டின் ஆக்க இலக்கியப் பரிசில்களுக்கான ஆய்வுக் கட்டுரைகளை இவ்வாண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன். சங்கப் பொதுச் செயலாளருக்கு இல. 7, 57ஆம் ஒழுங்கை, கொழும்பு - 6 என்ற முகவரிக்கு பதிவு அஞ்சலாக அனுப்பும்படி கேட்டுள்ளது:

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பரிசிலுக்கான இலக்கண ஆய்வுக் கட்டுரை "உரிச் சொற்பாகுபாடும் பயன்பாடுகளும்" எனும் பொருளிலும் —

சைவப் பெரியார் எஸ். சிவசுப்பிரமணியம் நினைவுப் பரிசிலுக்கான திருமுறை இலக்கிய ஆய்வுக் கட்டுரை "பதினொராந் திருமுறையும் சைவ சித்தாந்தக் கோட்பாடுகளும்" எனும் பொருளிலும் —

சட்ட வல்லுநர் எஸ். அம்பலவாணர் நினைவுப் பரிசிலுக்கான சட்ட இயல் ஆய்வுக் கட்டுரை "சட்ட ஆக்கமும் நடைமுறைப்படுத்தலும்" எனும் பொருளிலும் —

சங்கப் பரிசிலுக்காக ஆற்றுப்படை நூலாக்கமும் எழுதப்பட வேண்டும் என்றும் —

ஆய்வுக் கட்டுரைகள் 10 பக்கங்களுக்குக் குறையாமலும் ஆற்றுப்படை நூல் 400—500 அடிகள் உள்ளதாக இருக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்படுகிறது. (ச)

இனவாதம் பேசியவர்கள் இப்போது சு.கவில் இல்லை

அனுருத்த ரத்வத்தை கூறுகிறார்

இனவாதம் பேசியவர்கள் சுதந்திரக் கட்சியில் இன்று இல்லை என்று, அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் எம். பியுமான அனுருத்த ரத்வத்தை தெரிவித்திருக்கின்றார்.

கண்டியில் நடைபெற்ற இந்திய வம்சாவளி மக்கள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் சொன்னதாவது:

தமிழ் மக்கள் சுதந்திரக் கட்சியைப் பற்றி தப்பபிப்பிராயம் கொண்டுள்ளார்கள். சரியான புரிந்துணர்வு இல்லாததே இதற்குரிய காரணமாகும்:

1977, 1983 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற இனக்கலவரங்களில் யார் ஈடுபட்டனர் என்பதை மக்கள் அனைவரும் அறிவர். எமது கட்சியில் இருந்த இனவாதிகள் வெளியேறிவிட்டனர்.

இனவாதப் போக்கில் பேசுபவர்களுக்கு நாம் தடை விதித்துள்ளோம். இனவாதப் போக்கை ஒழித்துக் கட்டுவதே எமது லட்சியம். சகல மாவட்டங்களிலும் தோட்டப் பிரதேசங்களிலும் சுதந்திரக்கட்சி தமிழ் அமைப்பாளர்களை நியமித்துள்ளது.

தமிழர்கள் பிரச்சினைகள் பற்றி சுதந்திரக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளியிடப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-எ)

யாழ். வாக்காளர் பட்டியல் ஒரு பகுதி மட்டுமே தமிழில்!

எஞ்சிய பகுதி சிங்கள மொழியில்

கொழும்பு, ஜூலை 12

யாழ். தேர்தல் மாவட்டத்தின் வாக்காளர் பட்டியல் முழுவதும் தமிழில் தயாரிக்கப்படவில்லை என்று முறையிடப்பட்டுள்ளது.

ஒரு பகுதியே தமிழில் இருப்பதாகவும் மிகுதி சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையாளரிடம் எடுத்துக் கூறப்பட்டது.

வாக்காளர் பட்டியல் தமிழில் இல்லாதது அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயல் என்று மொழிகள் ஆணைக்குழுத் தலைவரிடம் புகார் கூறப்பட்டுள்ளது.

சனசமூக நிலையங்கள்

அன்பளிப்பு புத்தகங்களை வாங்கவும் பின்னடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ். மாநகராட்சி மன்றத்தால் அன்பளிப்பாக வழங்கப்படும் புத்தகங்களை சனசமூக நிலையங்கள் பெற்றுச் செல்வதற்கு ஏனோ பின்னடிக்கின்றன என்று கவலையுடன் தெரிவித்தார் ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம்.

ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் ச. ச. நிலையங்களுக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டும் இன்னும் அநேக நிலையங்கள் அவற்றைப் பெற்றுக் கொள்ளவில்லை என்றும் அவர் கூறினார்.

இனி மேலாவது காலம் தாழ்த்தாது தம்முடன் தொடர்பு கொண்டு புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டார். (ஒ-17)

புலிகளின் குரல் வானொலியில்

12 _07 _ 1994
செவ்வாய் இரவு

- ★ 8-01 — ஊர்சுற்றும் ஒலிவாங்கி
- ★ 8-10 — அறிந்து கொள்ளுங்கள் —தகவல் களஞ்சியம்
- ★ 8-20 — நலந்தானா — மனிதனுடைய ஆரோக்கியமான வாழ்வை கணிக்கின்ற மருத்துவ அளவுகள் பற்றி சில ஆலோசனைகள்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — கருத்துக்களம்— "முயற்சி"
- ★ 8-50 — கனமும் கானமும் — "காவரணும் கடிதமும்"

13 _07 _ 1994
புதன் காலை

- ★ 7 03 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7. 30 — செய்திகள்
- ★ 7. 35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

வீதித்திருத்த வேலைகள்

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட நுணாவில் தண்ணீர்சால் முட்டு வீதி ஒரு லட்சம் ரூபா செலவில் செப்பனிடப்படவுள்ளது. இதற்கான நிதி பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது. (எ-117)

பொருளற்ற பெண் என்றால் உயிரற்ற சடமா?
இருளுக்குள் வாழ்வது தான் இவர்களின் விதியா?

யாழ். மாவட்ட
அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம்

மெய்வல்லுநர் சட்டவிதிகளில்
தேர்ச்சி பெற்றோரை
தெரிவு செய்வதற்கான பரீட்சை

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை கீழ் வரும் இடங்களில் ரூபா இரண்டு செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு தினம்: 15-07-94

✱ அருண் பிறிண்டர்ஸ்,
15. இரண்டாவது ஒழுங்கை,
மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

✱ அருள்நாயகி புத்தகசாலை,
கொடிகாமம் சந்தி.

✱ ஜே. எஸ். சி. ஸ்ரேஷனர்ஸ்,
சாவகச்சேரி.

✱ பி. சிவானந்தராஜா,
பத்திரிகை முகவர்,
புத்தூர் சந்தி.

✱ ஆர். புஷ்பநாதன்,
பத்திரிகை முகவர்,
சங்கானை.

★ துர்க்கா ஸ்ரேஷனர்ஸ்,
சுன்னாகம்.

✱ உதயன் புத்தகசாலை,
பஸ் நிலையம்,
பருத்தித்துறை.

✱ திரு. சண். தயாளன்
யாழ். இந்துக்கல்லூரி.

செயலாளர்,
யா. மா. அ. மெ. ச.

[கி-8730]

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்:
21
—
05
—
1963

தருமத்தின் பிடியில்:
23
—
06
—
1993

நாகமுத்து யோகேஸ்வரி

(குடும்பநல உத்தியோகத்தர், கைதடி தென்கிழக்கு)

திதி: **12-07-1994**

பன்னிரு திங்கள் பறந்திட்ட போதிலும் போகா பாசமிகு உன் நினைவு பதிந்திட்ட எங்கள் நெஞ்சம் பரிதவிக்குதே!!!

குடும்பத்தினர்.

கைதடி தெற்கு. (7520)

மரண அறிவித்தல்கள

வைரமுத்து நடராசா

(சங்கானை)

சுதுமலைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வதிவிடமாகவும் கொண்ட வைரமுத்து நடராசா (பப்பா) [முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர் றிச்சார்ட் பீரிஸ் அன் கம்பனி] 11-07-94இல் காலமானார்.

இவர் முருகேசு தையல்முத்துவின் அன்புக் கணவரும், தவராசா (மன்னார்), தவமணி (ஆசிரியை, ஸ்ரீகணேச வித்தியாலயம்-சித்தன்கேணி), தேவராஜன் (அதிபர், முஸ்லிம் வித்தியாலயம் - பேசாலை, மன்னார்), ராஜவதி (லண்டன்), சாந்தினி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சச்சிதானந்தம் (ஆசிரியர், [illegible] இந்துக்கல்லூரி), சிவபாக்கியம், குமுதா (ஆசிரியை, கொன்வென்ற் - மன்னார்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கீதாஞ்சலி, பிரதீபன், சுதாகரன், தவச்செல்வி, ராகுலன், ரஜீவிந்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-7-94) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் காலை 10-00 மணிக்கு ஆரம்பித்து பூதவுடல் தகனத்திற்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
இ. சச்சிதானந்தம்
(மருமகன்)

குளத்தடிவீதி,
சங்கானை

(31874)

திருமதி துளசியம்மா கதிரவேலு

திருமதி துளசியம்மா கதிரவேலு 11-07-94 இல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற மலேசிய டாக்டர் கதிரவேலுவின் அன்பு மனைவியும், திருமதி மகேஸ்வரி ஆரியரத்தினம், திரு. விஜயசிங்கம் [துரை] [கலா சோடா உரிமையாளர்], மகேந்திரன் [[illegible]] ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற வண்ணை வைத்தியசன் வைரமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற அமிர்தரத்தினம், காலஞ்சென்ற நாகேஸ்வரி, கமலேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 12-07-94 செவ்வாய்க்கிழமை காலை 10 30 மணிக்கு 166/3, நாவலர் வீதி, இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக்கொள்கிறோம்.

தகவல்:
க. விஜயசிங்கம்
[கலா சோடா உரிமையாளர்]
[மகன்]

[கி/8732]

இன்று

கச்சாய் துறையூர் கலைமகள் சனசமூக நிலையத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று பிற்பகல் 4 மணிக்கு நிலைய முன்றலில் நடைபெறும். பிரதம விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலாளர் திரு. பு. சுந்தரம்பிள்ளையும், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த திரு சுந்தண்ணாவும் கலந்து கொள்வர்.

தென்மராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. கலைவாணன், சாவகச்சேரி பிரதேசசபை கச்சாய் உப அலுவலகப் பொறுப்பதிகாரி திரு. கனகசிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (ஐ-117)

கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 12

வலயம் -1ஐ சேர்ந்த நல்லூர் யாழ்ப்பாணம் கோட்டத்தின் சகல பாடசாலை அதிபர்களுக்குமான கலந்துரையாடல் இன்று 12 ஆம் திகதி பிற்பகல் 2. மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழீழ நிர்வாகச் சேவை பொறுப்பாளர் அறிவித்துள்ளார். [இ]

பல்கேரியா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போட்டியில் பிறேசிலை எதிர்த்து சுவீடன் மோதும்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஒரு கால்இறுதிப் போட்டியில் பல்கேரியா ஜேர்மனியை 2-1 கோல்களால் தோற்கடித்தது.

ஜேர்மனி தற்போதைய உலக உதைபந்தாட்டச் சம்பியனாக இருக்கிறது. ஜேர்மனி தோற்கடிக்கப்பட்டது, உதைபந்தாட்ட வரலாற்றில் பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற மற்றைய கால்இறுதிப் போட்டியில் — பெனால்டி உதைகளின் முடிவில் -- ருமேனியாவை சுவீடன் 5-4 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது. (உ-ஏ)

கிளிநொச்சியில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட ஊர்திகளில் பவனியாக எடுத்து வரப்படும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

சிறப்புரைகளும், இசை நடன நிகழ்ச்சிகளும், மாணவர்களிடையே நடத்தப்பட்ட கலைத்திறன் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும் அங்கு நடைபெறும் (ஐ-76)

அதிபர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏ, பி, தர பாடசாலைகள்

★ அதிபர்கள்:- இலங்கை கல்வி நிர்வாக சேவையில் இரண்டாம், மூன்றாம் வகுப்பு உத்தியோகஸ்தர்கள்.

★ பிரதி அதிபர்கள்:- இலங்கை கல்வி நிர்வாக சேவையில் 3ஆம்வகுப்பு உத்தியோகஸ்தர்கள் அல்லது இலங்கை அதிபர் சேவை முதலாம் தர அதிபர்கள்.

★ உதவி அதிபர்கள்:- இலங்கை அதிபர் சேவையில் முதலாம் இரண்டாம் தர அதிபர்கள்.

★ பகுதித் தலைவர்கள்:- அதிபர் சேவை இரண்டாம் அல்லது மூன்றாம் தர அதிபர்கள்.

சி தர பாடசாலைகள்

★ அதிபர்கள்:- இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த மூன்றாம் வகுப்பு உத்தியோகஸ்தர்கள் அல்லது அதிபர் சேவையில் முதலாம் தர அதிபர்கள்.

★ பிரதி அதிபர்கள்:- இலங்கை அதிபர் சேவை முதலாம் அல்லது இரண்டாம் தர அதிபர்கள்

★ உதவி அதிபர்கள்:- அதிபர் சேவை இரண்டாம் அல்லது மூன்றாம் தர அதிபர்கள்.

★ பகுதித் தலைவர்கள்:- அதிபர் சேவை மூன்றாம் தர அதிபர்கள்.

இரண்டாம் தர
பாடசாலைகள்

★ அதிபர்கள்:- அதிபர் சேவையில் இரண்டாம் தர அதிபர்கள்.

★ பிரதி அதிபர்கள்:- அதிபர் சேவை இரண்டாம் அல்லது மூன்றாம் தரம்.

★ பகுதித் தலைவர்கள்:- அதிபர் சேவை மூன்றாம் தர அதிபர்கள்.

மூன்றாம் தர
பாடசாலைகள்

★ அதிபர்கள், பிரதி அதிபர்கள், பகுதித் தலைவர்கள்:- இலங்கை அதிபர் சேவை மூன்றாம் தர அதிபர்கள்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [illegible] லிமிட்டெட்டினரால் [illegible] அச்சகத்தில் 12-07-1994 இல் [illegible] வெளியிடப்பெற்றது.

தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வு அட்டவணை-1994

திகதி	முற்பகல்	பாடம்	பிற்பகல்	பாடம்
12—08—94	8-30 — 9-15	தமிழ்மொழியும் இலக்கியமும் I	1-30 3-00	தமிழ்மொழியும் இலக்கியமும் III
	9-45 — 11-45	தமிழ்மொழியும் இலக்கியமும் II		
13—08—94	8-30 — 9-30	ஆங்கிலம் I	1-00 — 2-00	சமயம் I
	9-45 - 11-45	ஆங்கிலம் II	2-15 — 4-15	சமயம் II
16-08-94	8-30 — 11-30	கணிதம் II	1-00 — 2-00	கணிதம் I
			2-15 — 4-15	தட்டெழுத்துத் தொகுதி I
17 08-94	8-30 — 11-30	விஞ்ஞானம் II	1-00 — 2-00	விஞ்ஞானம் I
			2-15 — 4-15	தட்டெழுத்துத் தொகுதி II
18—08-94	8-30 — 11-30	வரலாறும் சமூகக்கல்வியும் II	1-00 — 2-00	வரலாறும் சமூகக்கல்வியும் I
			2-15 — 4-15	தட்டெழுத்துத் தொகுதி III
19-08—94	8-30 — 9-30	தொழில்நுட்பப் பாடம் I	1-00 — 2-00	வர்த்தகமும் கணக்கியலும் I
	9-30 — 11-30	தொழில்நுட்பப் பாடம் II		
	9 00 — முதல்	சுருக்கெழுத்து		
	8-30 — 10-30	வர்த்தகமும் கணக்கியலும் II		
20—08 94	8-30 — 9-30	அழகியல் I	1-00 - 3-00	அழகியல் (சித்திரம்) III
	10-00 — 12-00	அழகியல் II		
	8-30 — 11-30	ஆங்கில இலக்கியம்		

ஆலய உற்சவங்கள்

அச்சுவேலி உலவிற்தளம் சித்தி விநாயகர் கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று நண்பகல் 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 21ஆம் திகதி காலை 10மணிக்கு ரதோற்சவமும் மறுநாள் காலை 8 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும், (ஒ)

★ ★ ★

எழுதுமட்டுவாழ், விழு பளை கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தேர்த் திருவிழா 21ஆம் திகதி காலை 8 மணிக்கும் தீர்த்தத் திருவிழா 22ஆம் திகதி காலை 10 மணிக்கும் நடைபெறும். (ஒ)

★ ★ ★

தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி (முருக மூர்த்தி) கோயில் மஹோற்சவம் நாளை புதன்கிழமை காலை 11-30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தேர்த் திருவிழா 21ஆம் திகதி காலை 9 மணிக்கும் தீர்த்தத்திருவிழா 22ஆம்திகதி காலை 9மணிக்கும் நடைபெறும்.

மஹோற்சவத்தின் முதல் 7 தினங்களில் திரு த. சிவகுமாரனும் தொடரும் 3தினங்களில் திரு. செ.இராசகுலேந்திரனும் சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்துவார்கள். (க)

★ ★ ★

சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி கோயில் தேர்த் திருவிழா நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கும் தீர்த்தத் திருவிழா மறுநாள் காலை 11 மணிக்கும் நடைபெறும். (க-89-152)

★ ★ ★

அளவெட்டி தெற்கு வெளியல் முத்துமாரி அம்மன் கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும். (க-89-13)

★ ★ ★

வல்வெட்டித்துறை ஆதி கோயிலடி ஆதி வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை புதன்கிழமை பகல் 12 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

பூந்தொட்டியாசனம் 18 ஆம் திகதியும் தீர்த்தத் திருவிழா 23 ஆம் திகதி காலை 7 மணிக்கும் நடைபெறும். (க-155)

★ ★ ★

கொக்குவில் மாத்தனைக் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நாளை புதன் கிழமை காலை 9.30மணிக்கும் தீர்த்தத் திருவிழா மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கும் நடைபெறும். (க)

★ ★ ★

வதிரி பூவற்கரைப்பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. திருவிளக்குப் பூசை 17 ஆம் திகதி மாலையும் தீர்த்த உற்சவம் 22ஆம் திகதியும் நடைபெறும். தினமும் மாலை வேளையில் சமயச் சொற்பொழிவுகள் இடம்பெறும். (க)

★ ★ ★

கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

★ ★ ★

திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய தேர்த் திருவிழா நாளைபுதன்கிழமை காலை 8.30 மணிக்கும் தீர்த்தத் திருவிழா மறுநாள் காலை 9மணிக்கும் நடைபெறும்.

★ ★ ★

நல்லூர் மூத்தவிநாயகர் ஆலய தேர்த்திருவிழா நாளை புதன்கிழமை காலை9 மணிக்கு நடைபெறும்.மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த்த திருவிழா இடம்பெறும். (எ-111)

★ ★ ★

அராலி மேற்கு வண்ணபுரம் விசாலாட்சி சமேத விஸ்வநாதர் ஆலய தேர்த்திருவிழா நாளை புதன்கிழமை நடைபெறும். மறுநாள் நண்பகலில் தீர்த்தத் திருவிழா இடம்பெறும் (எ-111)

★ ★ ★

எழுதுமட்டுவாள் சிவன் கோயில், சாவகச்சேரி வாரிவனநாத சிவன் கோயில் ஆகியவற்றில் ஆனி உத்தர மஹோற்சவத்தை ஒட்டிய தேர் உற்சவம் நாளை (புதன்) காலை 8 மணிக்கு நடைபெறும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

★ ★ ★

அராலி தெற்கு கரைப்பிட்டி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை (புதன்) காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பித்து தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும்; தேர்த் திருவிழா எதிர்வரும் 21 ஆம் திகதியும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஐ-12)

★ ★ ★

சுழிபுரம் பறாளை ஈஸ்வர விநாயகர் தேர்த் திருவிழா நாளை புதன்கிழமை நடைபெறும் விநாயகர் கட்டுத்தேரில் பகல் 1 மணிக்கு வீதியுலா வந்து பக்தர்களுக்கு காட்சி கொடுப்பார். சித்தன்கேணி சிதம்பரேஸ்வர ஆலய தேர்த் திருவிழாவும் நாளை முற்பகல் 9 மணிக்கு நடைபெறும். ஐந்து தேரில் பிள்ளையார், நடேசர் அம்பாள், முருகன், சண்டேஸ்வரர் வீதியுலா இடம்பெறும். (ஓ-28)

★ ★ ★

ஆவரங்கால் ஸ்ரீநடராச இராமலிங்கேஸ்வரர் கோயில் தேர்த்திருவிழா நாளையும் (புதன்) தீர்த்தத் திருவிழா நாளை மறுதினமும் நடைபெறவுள்ளன, (ஐ-11)

★ ★ ★

புத்தூர் மேற்கு ஸ்ரீ விசாலாட்சி சமேத ஸ்ரீவிஸ்வநாதர் ஆலய தேர்த் திருவிழா நாளை (புதன்) நடைபெறும். மறுநாள் தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (ஐ-11)

விபத்தில் யுவதி பலி

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்தில் நேற்று காலை இடம்பெற்ற விபத்து ஒன்றில் டிராக்டருடன் மோதுண்டு யுவதி ஒருவர் பலியானார்.

அதே இடத்தைச் சேர்ந்த ஐயாத்துரை புஷ்பராணி (வயது 20) என்பவரே உயிரிழந்தவராவார். (உ-117)

மணிவாசகர் குருபூசை இன்று

மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசைத்தினம் இன்று செவ்வாய்க்கிழமை பல இடங்களில் அனுஷ்டிக்கப்படுகிறது.

மணிவாசகர் குருபூசையை முன்னிட்டு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் காலை 8 மணி தொடக்கம் திருவாசக முற்றோதல் நடைபெறும். நண்பகல் 11.30 மணிக்கு விசேட அபிஷேகமும் பிற்பகல் 5 மணிக்கு உற்சவமும் இடம்பெறும்.

★ ★ ★

காரைநகர் மணிவாசகர் சபை நடத்தும் குருபூசை விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் கந்தசுவாமி கோயில் மண்டபத்தில் இடம்பெறும்

மணிவாசகர் கண்ட சிதம்பரம் என்ற தலைப்பில் திரு. கு. கதிரவேலுவும், மணிவாசகர் காட்டிய அறநெறி என்ற தலைப்பில் திரு. க. பாலசுப்பிரமணியமும் உரையாற்றுவார்கள். சபை நடத்திய பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

★ ★ ★

யாழ். சிறாம்பியடி கலைப்புலவர் வீதியில் உள்ள மெய்கண்டதேவர் ஆதீனத்தில் காலை 9 மணிக்கு நடைபெறும் குருபூசை நிகழ்ச்சியில் திருவாசகமணி க. மாணிக்கவாசகர் உரை நிகழ்த்துவார்.

★ ★ ★

சுழிபுரம் சைவ நன்னெறிக் கழகம் மணிவாசகர் குருபூசைத் தினத்தை இப்பகுதியில் பல இடங்களில் அனுஷ்டிக்க ஒழுங்கு செய்துள்ளது.

★ ★ ★

தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் அடியார் மடத்தில் இன்று மணிவாசகர் குருபூசை கொண்டாடப்படும். இந்நிகழ்வில் திருவாசக மனனப் போட்டி, பரிசு வழங்குதல் ஆகியன இடம்பெறும்.

கடைசி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டை மாற்றி வந்திருக்கிறார்.

"பிரேமதாஸாவின் படுகொலைக்குப் பின்னர் ஆளும் கட்சியினால் தாங்கள் கேவலமாக நடத்தப்பட்டதாகக் கருதும் அவரின் பிள்ளைகள், தாய் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து மாறுபட்ட உணர்வுகளைக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது — என்றும் பி. பி. ஸி. குறிப்பிட்டது

ஆளும் கட்சி சார்பில் தாம் போட்டியிடப் போவதில்லை என்று ஹேமா பகிரங்கமாகக் கூறியிருந்த போதிலும் — பின்னர் ஜனாதிபதி விஜேதுங்காவுக்கும் ஹேமாவுக்கும் இடையே ஏற்பட்ட இணக்கத்தின்படி தேர்தலில் போட்டியிட ஹேமா சம்மதித்தார். என்று தெரிவிக்கப்பட்டது. (உ-எ-6- 4)

கொழும்பு செல்லும் நோயாளர்களுக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 12

நாளைமறுதினம் வியாழன் அன்று கப்பல் மூலம் கொழும்பு செல்லத் தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களையும் அவர்களுடன் செல்லும் உதவியாளர்களையும் இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு, தண்ணீர் என்பவற்றுடன் அன்று நண்பகல் 11 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரியில் சமுகமளிக்குமாறு பணிப்பாளர் அறிவித்துள்ளார். [ஐ]

யாழ். றோட்டறிக் கழகம்
வசதி குறைந்தோருக்கான
இலவச
கண் சத்திரசிகிச்சை முகாம் - 3

ஆரம்பப் பரிசோதனை

இடம்: இணுவில் மக்லியொட் வைத்தியசாலை,
காங்கேசன்துறை வீதி, இணுவில்.

காலம்: 17-07-94 ஞாயிறு காலை 7 30 மணி

"கற்றக்" நோயாளர்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 7. 30 மணிக்கு இணுவில் மக்லியொட் வைத்தியசாலையில் ஆரம்பப் பரிசோதனைக்கு சமுகமளிக்குமாறு வேண்டுகிறோம்.

Rtn: ஏ. சரவணபவன்,
தலைவர்
யாழ். றோட்டறிக்கழகம்

292/2, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

வெளிவந்துவிட்டது!
போட்டிப்பரீட்சை, வினா-விடை போட்டி ஆகியவற்றுக்கு
அதி சிறந்த வழிகாட்டி
அஷ்டலக்ஷ்மி
பொது அறிவு
பக்கம் 128 விலை: 65/-
தமிழ் மூலம் ஆங்கிலம் பயில
அஷ்டலக்ஷ்மி
EASY ENGLISH GRAMMAR
சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும்
[கி-8731]